செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்ட
03-12-2020 அன்று முற்பகல் 11.00 மணிக்கு
நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

தலைவர்: செல்வி. கோ. நித்தியா பி.இ., எம்.இ.,
தனி அலுவலர் அவர்கள்.

மன்றப்பொருள்-

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண். 20452/2020/எல்ஏ3, நாள். 10.11.2020–ல் 15–வது மத்திய நிதிக்குழு பரிந்துரை திட்டத்தின் கீழ் மான்யமாக குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ரூ. 32,59,359/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சுப்பிரமணியபுரம், இலத்தூர் சாலையில் அமைந்துள்ள வளம் மீட்பு பூங்காவில் மறுசுழற்சி பொருட்கள் சேகரிக்கும் கூடம் அமைத்தல் | ரூ. 9.70 |
| 2 | சுப்பிரமணியபுரம், இலத்தூர் சாலையில் அமைந்துள்ள வளம் மீட்பு பூங்காவில் சுற்றுசுவர் அமைத்தல் | ரூ. 9.80 |
| 3 | சசிவோத்தமா நீர்த்தேக்க நிலையத்தில் உள்ள கரையில் பாதுகாப்பு சுவர் அமைத்தல் | ரூ. 13.50 |
| | மொத்தம் | ரூ.33.00 |

அலுவலககுறிப்பு-

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளலாம்

## <u>மன்றபொருள்</u>

செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் பாதுகாப்பு அறையை (ஒதுக்கீடு எண் 144/BD01/00003) திரு.எஸ்.மாசாணம் என்பவர் 01/04/2018 முதல் 31/03/2021 வரை உரிமம் எடுத்துள்ளார் அன்னார் உரிமம் எடுத்துள்ள பொருட்கள் பாதுகாப்பு அறைக்கு நாளது தேதி வரை எவ்வித தொகையும் செலுத்தவில்லை. நாளது தேதி வரை அவர் செலுத்த வேண்டிய நிலுவை மற்றும் நடப்பு ஆண்டுக்கான தொகை ரூ.65,023/– (GST உட்பட) உள்ளது. எனவே அன்னார் செலுத்திய வைப்புத்தொகை ரூ.20000/– ஈடு செய்து அது போக மீதமுள்ள உரிமை தொகை கேட்பு மற்றும் சேவை வரி சேர்த்து ரூ33,640/– ஐ அவர் பெயரில் நிலுவை வைத்து அன்னாரின் உரிமத்தை 01/12/2020 முதல் ரத்து செய்து புதிய ஏலம் கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:– (ந.க.எண்.3090/2015/வ.ஆ)
1.மன்றம் அனுமதி வழங்கலாம்
2.மேற்படி வரிவிதிப்பினை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்